**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC – 125/2024 (/20) |
| Deposition of witness for | Prosecution : LW 8 – PW 6 |
| | Defence : |
| | Court : |
| Name : Dr. R. கதிரவன் | Father's Name: ராஜேந்திரன் |
| | Husband Name: |
| Village/Town : திருவண்ணாமலை | Taluk : |
| Mail ID: kathir4s@gmail.com | Calling : மருத்துவர் |
| | Age : 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.03.2026

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தனியார் மருத்துவமனையில் மருத்துவ நிபுணராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11.02.2012ம் தேதி காலை 07.00 மணியளவில் நான் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக இருந்த போது ஆறுமுகம், வயது–43, த/பெ. அர்ஜீனன், என்பவரை ஹரிகிருஷ்ணன் என்ற தெரிந்த நபர் ஆண் நபர் ஒருவர் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். நோயாளி ஆறுமுகம் வாயில் அடிப்பட்டு பேசமுடியாமல் இருந்ததால் அவரை அழைத்து வந்த ஹரிகிருஷ்ணனை விசாரணை செய்தபோது ஆறுமுகத்தின் வீட்டின் அருகே 11.02.2012ம் தேதியன்று காலை 07.30 மணிக்கு மண்வெட்டி, கட்டைக்கொண்டு தெரிந்த நபர் தாக்கியதாக தெரிவித்தார். அவர் மருத்துவமனைக்கு வரும்போது சுயநினைவுடன்

இருந்தார் மேற்கொண்டு பரிசோதனையில் கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. மேல் உதட்டில் 1x1x1 செ.மீ அளவிலான வெட்டுக்காயமும், 2. மேல் அன்னம் ஆடியவாறும் வலியுடனும், 3. வலது காலில் 2x2 செ.மீ. அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு 11.02.2012ம் தேதியன்று CT Scan எண்.59608 எடுக்கப்பட்டது. அதில் Mandible என்ற எலும்பு இடதுபக்கமாக உடைந்து இருந்தது கண்டறியப்பட்டது. அவருக்கு காணப்பட்ட 2வது காயம் கொடுங்காயம் என்றும், 1 மற்றும் 3வது காயம் சொற்பகாயம் என்றும் கருத்துரை வழங்கி விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்துப்பத்திவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**குறுக்குவிசாரணை**</u>

(எதிரித்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் கோரியதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**